# CC.NO.43/2020 PW-7

**நாள்** : 22.05.2024

பெயர் : கருணாகரன்

த/பெ : தமோதரன்

**(1ம் எதிரி அஜர், எதிரிகள் 2,,4 ஆஜரில் இல்லை. 2 மற்றும் 4 வது எதிரிகள் சார்பில் கு.வி.மு.ச பிரிவு 317 ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது, 3ம் எதிரி காலமாகிவிட்டார்)**

**சாட்சி மனுவின் மீது மீண்டும் வரவழைக்கப்பட்டு எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

நீங்கள் எங்கு பணி செய்து வருகிறிர்கள் என்றால் Custom House Agency என்ற தனியார் நிறுவனத்தில் வேலை பார்த்து வருகிறேன். அ.சா.2 லோகநாதன் உங்கள் நண்பர் என்றால் இல்லை என் பக்கத்து வீட்டுக்காரர். சம்பவம் எந்த தேதியில் நடந்தது என்று முதல் விசாரணை மற்றும் போலீசாரிடம் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சொல்லியுள்ளேன். நீங்கள் தவறாக சாட்சியம் அளக்கிறிர்கள் வழக்கு சம்பவ தேதி குறித்து நீங்கள் முதல் விசாரணை மற்றும் போலீசாரிடம் சொல்லவில்லை என்றால் அது தவறு. முதல் விசாரணையில் நீங்கள் கூறிய சங்கதிகள் யார் மூலமாக உங்களுக்கு தெரிய வந்தது என்று உங்கள் போலீஸ் விசாரணையில் நீங்கள் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் இல்லை சொல்லியுள்ளேன். நீங்கள் சொல்வது தவறு அவ்வாற நீங்கள் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் தவறு.

வழக்கு சம்பவம் பற்றி நேரடியாக தெரியாது என்றால் சில விஷியங்கள் தெரியும் சில விஷியங்கள் தெரியாது. தெரிந்ததாக சொல்லகூடிய விஷியங்கள் பற்றி போலீஸ்

விசாரணையில் நீங்கள் சொல்லவில்லை என்றால் அது தவறு. புவனேஷ்வரி திருமணத்திற்கு பிறகு எங்கு வசித்து வந்தார் என்றால் முதலில் புளியங்கண்ணுவில் உள்ள மாமியார் வீட்டிலும் பிறகு ஆற்காட்டிலும் வசித்து வந்தார். எவ்வளவு நாட்கள் கழித்து ஆற்காட்டுக்கு சென்று வசிக்க தொடங்கினார் என்றால் அது எனக்கு தெரியாது. புவனேஷ்வரி தங்கியிருந்ததாக சொல்லப்படும் ஆற்காடு விலாசத்திற்கு நீங்கள் செல்வது இல்லை என்றால் ஆமாம். போலீசார் வழக்கு சம்மந்தமாக உங்களை விசாரித்தார்களா என்றால் ஆமாம். உங்கள் முதல் விசாரணையில் போலீசார் எந்த தேதியில் உங்களை விசாரித்தார்கள் என்று நீங்கள் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சொல்லியுள்ளேன்.

இவ்வழக்கில் போலீஸார் உங்களை விசாரிக்க சம்மன் அனுப்பினார்களா என்றால் இல்லை வீட்டின் அருகே வந்து விசாரணை மேற்கொண்டார்கள். போலீசார் வீட்டருகே உங்களை விசாரிக்கும்போது உங்கள் வாக்குமூலம் பதிவு செய்தார்களா என்றால் அப்போது பதிவு செய்தார்கள் மற்றும் காவல் நிலையத்தில் வைத்து ஒரு முறை பதிவு செய்தார்கள். எந்த போலீசார் என்னிடம் வீட்டருகே வைத்து வாக்குமூலம் பதிவு செய்தார் என்று எனக்கு குறிப்பிட்டு தெரியாது. அ.சா.2 லோகநாதன் என்பவருக்கு நீங்கள் உறவினர் என்பதால் போலீசார் உங்களை சாட்சியாக சேர்த்துள்ளார்கள் உங்களுக்கு வழக்கு பற்றி நேரடியாக தெரியாது என்றால் சரியல்ல.எனவே தான் முதல் விசாரணையின் போது சம்பவம் குறித்த சங்கதிகள் எப்படி உங்களுக்கு தெரியவந்தது என்று சொல்லவில்லை என்றால சரியல்ல. முதல் விசாரணையில் சொன்ன அனைத்து தகவலும் பொய்யானது வழகுக்கு சம்மந்தமில்லாதது என்றால் சரியல்ல.

Typewritten to my dictation in open Court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by witness to be corrected.

Sd/- ********

District Munsif cum Judicial Magistrate,

Ranipet.